05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புத் திறனை KWLH அணுகுமுறை வழி மேம்படுத்துதல்.

# Improving Reading Skills of Form Two Students Through KWLH Approach

ஷாலினி கார்த்திகேசு

Shalini Karthigesu

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2024

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**படைப்புரிமை உறுதிமொழி - PERAKUAN KEASLIAN PENULISAN**

இந்த உறுதிமொழி ----/---/2024 அன்று வழங்கப்பட்டது. Perakuan ini telah dibuat pada seperti tarikh di atas.

**I. மாணவர் உறுதிமொழி (Perakuan Pelajar)**

தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்திற்காக இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புத் திறனை KWLH அணுகுமுறை வழி மேம்படுத்துதல் எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு என்னுடையச் சுய முயற்சியால் உருவாக்கப்பட்டது. மொழி தொடர்பியல் புலத்தின் மாணவியாகிய நான் ஷாலினி கார்த்திகேசு (D20211100688) உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வில் பதிப்புரிமையுடையப் படைப்புகள் யாவும் அனுமதி பெறப்பட்டு அவற்றின் மூலங்களைக் குறிப்பிட்டதோடு, துணை புரிந்த அனைத்து மேற்கோள்களும் துணை நூற்பட்டியலில் முறையாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

Saya, **SHALINI KARTHIGESU (D20211100688)** dari FAKULTI BAHASA DAN KOMUNIKASI dengan ini mengaku bahawa projek penyelidikan yang bertajuk **MENINGKATKAN KEMAHIRAN MEMBACA PELAJAR TINGKATAN DUA MELALUI PENDEKATAN KWLH** adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

TANDATANGAN :

SHALINI KARTHIGESU
D20211100688

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

II. நெறியாளர் உறுதிமொழி (Perakuan Penyelia)

இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புத் திறனை KWLH அணுகுமுறை வழி மேம்படுத்துதல் எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு ஷாலினி கார்த்திகேசு (D20211100688) என்ற மாணவியின் சுய முயற்சியால் உருவாக்கப்பட்டது என ஆய்வு நெறியாளராகிய நான், முனைவர் கிங்ஸ்டன் பால்தம்புராஜ் உறுதிமொழி வழங்குகிறேன். இந்த ஆய்வேடு தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்தைப் பெறுவதற்காக மொழி தொடர்பியல் புலத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

Saya, DR. KINGSTON PALTHAMBURAJ dengan ini mengesahkan bahawa hasil kerja pelajara yang bertajuk **MENINGKATKAN KEMAHIRAN MEMBACA PELAJAR TINGKATAN DUA MELALUI PENDEKATAN KWLH** dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada FAKULTI BAHASA DAN KOMUNIKASI bagi memenuhi sebahagian syarat untuk memperoleh IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL) DENGAN KEPUJIAN.

TANDATANGAN :

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

_______________________________

**DR KINGSTON PALTHAMBURAJ,**
**PENYELIA, FAKULTI BAHASA DAN KOMUNIKASI,**
**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS,**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**நன்றியுரை**

இந்த ஆய்வினை எந்த தங்கு தடையுமின்றிச் செய்து முடிக்க எனக்கு உதவி புரிந்த இறைவனை வணங்குகின்றேன். இவ்வாய்வினை மேற்கொள்ள அனுமதியளித்த சுல்தான் இட்ரிஸ் கல்வியில் பல்கலைக்கழக தமிழ்ப் பிரிவுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்ததாக, இந்த ஆய்வினைத் திட்டமிட்டபடி செய்து முடிக்க எனக்கு உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் இருந்த முனைவர் கிங்ஸ்டன் பால்தம்புராஜ் அவர்களுக்கும் எனது நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன். ஆய்வினை மேற்கொள்ளும் பொழுது எனக்குத் துணையாக இருந்த என் குடும்பத்தினருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இவ்வாய்வினை இடைநிலைப்பள்ளி முதல் வருக்கும், ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் பெற்றோர் மாணவர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இவ்வாய்வை மிகவும் சிறப்பாகச் செய்து முடிக்க துணை புரிந்த அனைவருக்கும் இரு கரம் இணைத்து நன்றியினைச் சமர்பிக்கின்றேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புத் திறனை KWLH அணுகுமுறை வழி மேம்படுத்துதல்.**


ஆய்வு சாரம்

இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புத் திறனை KWLH அணுகுமுறை வழி மேம்படுத்துவதற்கு இவ்வாய்வு மேற்கொள்ளப்படும். இரண்டாம் படிவ மாணவர்களுக்கு ஏற்படும் வாசிப்புச் சிக்கலை அடையாளங்காணுதல், இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புச் சிக்கலின் காரணங்களைக் கண்டறிதல், இரண்டாம் படிவ மாணவர்களுக்கு வாசிப்பில் ஏற்படும் சிக்கலை KWLH அணுகுமுறை வழி களைதல் எனும் மூன்று நோக்கங்களைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படும். இந்த ஆய்வினை பினாங்கு மாநிலத்தில் உள்ள பட்டர்வொர்த் மாவட்டத்தில் அமைந்திருக்கும் ஓர் இடைநிலைப்பள்ளியில் மேற்கொள்ளப்படும். இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆய்வு கருவியானது முன்னறித் தேர்வு, கருத்தறி வினாநிரல், பயிற்றுவித்தல், பின்னறித் தேர்வு ஆகும். KWLH அணுகுமுறை வழி இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துதல் என்பது ஆய்வின் முடிவாகும்.


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# Improving Reading Skills of Form Two Students Through KWLH Approach


## Abstract

The current study has set out to ascertain reading problems faced by students and its budding factors. The factors in this case were quite influential in determining that there is a gap in the reading skills of form 2 students  and that the KWLH approach has to be put into use. This study has aimed to identify reading difficulties among students along with their emerging causes. The effective 3 understanding of these factors helped to identify that there is a necessity of implementing the KWLH approach to improve the reading abilities among form 2 students. The research addresses prevalent reading challenges faced by students, such as difficulties in understanding context, decoding unfamiliar vocabulary, and connecting prior knowledge with new information. A mixed-methods approach was adopted, combining qualitative and quantitative data collection tools, including pre- and post-assessments, interviews, and surveys. The study outlines that improvement of students' reading and level of motivation for reading can be achieved through the KWLH approach. It also fostered critical thinking and retention of information. The study points out that several issues facing students when learning to read can be solved through the use of KWLH strategies; this is especially useful in contexts for learning a new language. This research offers practical implications for teachers to implement similar strategies for improved learning outcomes.


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | **இயல் 1 - அறிமுகம்** | |
| 1.1 | முன்னுரை | 1-2 |
| 1.2 | ஆய்வுச் பின்னணி | 3-6 |
| 1.3 | ஆய்வுச் சிக்கல் | 7-9 |
| 1.4 | ஆய்வு நோக்கம் | 10 |
| 1.5 | ஆய்வு வினா | 11 |
| 1.6 | ஆய்வு நன்மைகள் | 12-14 |
| 1.7 | ஆய்வு எல்லை | 15 |
| 1.8 | ஆய்வு சான்றாதாரம் | 16 |
| 1.8.1 | முதன்மைச் சான்றாதாரம் | |
| 1.8.2 | துணை சான்றாதாரம் | |
| 1.9 | கலைச்சொற்கள் விளக்கம் | 17-19 |
| 1.9.1 | KWLH அணுகுமுறை | |
| 1.10 | தொகுப்புரை | 20 |
| | **இயல் 2 - முந்தைய ஆய்வுகள்** | |
| 2.1 | முன்னுரை | 21-22 |
| 2.2 | முந்தைய ஆய்வுக் கட்டுரைகள் | 22-25 |
| 2.3 | தொகுப்புரை | 26 |
| | **இயல் 3 - ஆய்வு நெறிமுறை** | |
| 3.1 | முன்னுரை | 27 |
| 3.2 | ஆய்வு வடிவமைப்பு | 28-29 |
| 3.2.1 | ஆய்வு வடிவமைப்பு வரைப்படம் | 30 |
| 3.3 | ஆய்வுக் கட்டமைப்பு | 31 |
| 3.3.1 | மீட்டுணர்தல் | 32 |
| 3.3.2 | திட்டமிடுதல் | 33 |
| 3.3.3 | செயல்படுத்துதல் | 34 |
| 3.3.4 | உற்றுநோக்குதல் | 35 |
| 3.4 | ஆய்வு அணுகுமுறை | 37-38 |
| 3.5 | ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர் | 38 |
| 3.6 | தரவுச் சேகரிப்பு முறை | 39 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| | | |
|---|---|---|
| 3.7 | ஆய்வுக் கருவி | 39 |
| 3.7.1 | முன்னறித் தேர்வு | 40 |
| 3.7.2 | கருத்தறி வினாநிரல் | 40-41 |
| 3.7.3 | பின்னறித் தேர்வு | 41 |
| 3.8 | தரவுப் பகுப்பாய்வு முறை | 41-43 |
| 3.9 | தொகுப்புரை | 44 |
| | **இயல் 4 - ஆய்வு முடிவுகள்** | |
| 4.1 | முன்னுரை | 45 |
| 4.2 | ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்கள் | 46-47 |
| 4.3 | ஆய்வு நோக்கத்தின் முடிவுகள் | 48 |
| 4.3.1 | கருத்தறி வினாநிரல் | 48-51 |
| 4.3.2 | முன்னறித் தேர்வு | 52-57 |
| 4.3.3 | திட்டமிட்டு நடத்தப்பட்ட நடவடிக்கைகள் | 58-64 |
| 4.3.4 | பின்னறித் தேர்வு | 65-68 |
| 4.3.5 | முன்னறித் தேர்வுக்கும் பின்னறித் தேர்வுக்குமான வேறுபாடு | 69-76 |
| 4.4 | தொகுப்புரை | 77 |
| | **இயல் 5 - முடிவுரை** | |
| 5.1 | முன்னுரை | 78 |
| 5.2 | ஆய்வு முடிவு | 79-81 |
| 5.3 | தொடராய்வு தலைப்புகளின் பரிந்துரை | 82-83 |
| 5.4 | தொகுப்புரை | 84 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# இயல் 1

## அறிமுகம்

### 1.1 முன்னுரை

மலேசியக் கல்வி திட்டம் தமிழ் மொழிக்குத் தனித்துவமான இடத்தை அளித்துள்ளது என்றால் அது மிகையாகாது. நம் நாட்டின் கல்விக் கொள்கைக்கேற்ப இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழி ஒரு கூடுதல் மொழிப்பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. மலேசியக் கல்வி திட்டத்தில் ஒரு பகுதியானது மலேசியத் தேசியக் கலைத்திட்டம் ஆகும். இக்கலைத்திட்டம் மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் எதிர்பார்பை நிறைவுச் செய்யும் வகையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இக்கலைத்திட்டம் உட்கொள்ளும் திறனாகக் கேட்டல், வாசிப்பு மற்றும் வெளிப்படுத்தும் திறனாகப் பேச்சு, எழுத்து எனும் அடிப்படை திறன்களை உள்ளடக்கியுள்ளது. தமிழ் மாணவர்கள் தமிழ் மொழி பாடத்தைத் தேர்வுப் பாடமாக எடுக்கும்போது, இந்நான்கு திறன்களிலும் சிறந்து விளங்குவதற்குச் சிரமம் ஏற்படுகிறது.

முக்கியமான திறன்களில் ஒன்றாக இருப்பது வாசிப்புத் திறனாகும். வாசிப்பு என்பது எழுதப்பட்ட எழுத்துகளைப் பார்த்து, சொற்களைப் புரிந்து, அதில் கூறப்பட்டக் கருத்தை உணர்ந்து கொள்வது எனலாம். வாசிப்புத் திறன் மாணவர்களின் சிந்தனை திறனை அதிகரிக்கச் செய்கிறது. மேலும், வாசிப்புத்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


திறன் மாணவர்களை அறிவார்ந்தவர்களாகக் கட்டமைக்கின்றது. ஆனால், பெரும்பாலும் வாசிப்புத் திறனில் மாணவர்களிடையே பல சிக்கல்கள் காணப்படுவது இயல்பாகிவிட்டது.

தற்காலத்தில் மாணவர்கள் ஆசிரியர் வாசிக்கப் பணிக்கும் வாசிப்புப் பகுதியினையும் தேர்வுச் சமயத்தில் கொடுக்கப்படும் வாசிப்புப் பகுதியினையும் மட்டுமே வாசிக்கிறார்கள். அதைக்கூட வாசித்தால் மட்டுமே போதும் எனும் எண்ணத்தோடு வாசிக்கிறார்கள். ஒரு வாசிப்புப் பகுதியினை முழுமையாகப் புரிந்துக் கொள்ளவும் கருத்தினை உள்வாங்கிக் கொள்ளவும் மாணவர்கள் முற்படுவதில்லை. இதனால், மாணவர்கள் வாசிப்புத் திறனில் பின்தங்கியே காணப்படுகிறார்கள். இத்தகையச் சிக்கலைக் களைவதற்கே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புத் திறனை KWLH அணுகுமுறை வழி மேம்படுத்துவதற்கு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாணவர்களின் வாசிப்புச் சிக்கலையும், சிக்கல் ஏற்படுவதன் காரணங்களையும் கண்டறிவதோடு, KWLH அணுகுமுறை வழி இரண்டாம் படிவ மாணவர்களுக்கு வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கு இவ்வாய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வு, மாணவர்களுக்கு ஒரு செயல்திறன் ஆய்வு வடிவமைப்பைப் பயன்படுத்தி நடத்தப்பட்டுள்ளது. இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புத் திறன் மேம்படுத்துவதற்கு இத்தகையப் புதிய அணுகுமுறைகளின் பயன்பாடு கண்டிப்பாக உதவக்கூடும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.2 ஆய்வுப் பின்னணி

பல வாசிப்புக் கூறுகள், வாசிப்பு முறைகள், வாசிப்பு நோக்கங்கள் போன்றவற்றைக் கொண்டுள்ள வாசிப்புத் திறனை இரண்டாம் படிவ மாணவர்களிடையே மேம்படுத்துவதற்கு ஆய்வாளர் KWLH அணுகுமுறையைப் பயன்படுத்தி இந்த ஆய்வினை நிறைவு செய்துள்ளார். உச்சரிப்புப் பிழையின்றி சரளமாக வாசிப்பது மட்டுமே வாசிப்புத் திறனை மேம்படுத்தலாகாது. வாசிப்புப் பகுதியினை வாசித்துப் புரிந்து கொள்ளலும் மிகவும் அவசியமாகும். ஆனால், அதுவே இக்கால மாணவர்களிடம் காணப்படும் மிகப்பெரிய வாசிப்பின் சிக்கலாகும். வாசிப்புப் பகுதியினை முழுமையாகப் புரிந்துக்கொண்டு வாசிப்பதில் மாணவர்கள் சிக்கல் கொள்கிறார்கள். இந்த ஆய்வில் KWLH அணுகுமுறை மாணவர்களின் வாசிப்புப் புரிதலை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால், இன்றையத் தற்கால மாணவர்கள் வாசிப்புப் பகுதியிலுள்ள பல கருத்துகளைப் புரிந்துக்கொள்வதோடு அறிவினை வளர்த்துக்கொள்ளவும் முடியும். மேலும், வாசிப்புத் திறன் உள்ளடக்கியுள்ள முக்கியத்துவங்களை ஆய்வாளர் இந்த அணுகுமுறையின் வழியாகக் கண்டறிய முயன்றுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வாசிப்பு என்பது ஒரு சிந்தனை செயல்முறையாகும். இது மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் சிந்திப்பது, யோசனைகளைத் தொடர்புபடுத்துதல், கேள்விகளைக் கேட்பது மற்றும் கருத்துகளைக் கொடுப்பதன் மூலம் பதிலளிப்பது மற்றும் புதியச் சூழ்நிலைகலில் புதுபித்தத் தகவல்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது (ஆர்.வீரரட்சகி,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


2021). வாசிப்பு திறன் மற்ற திறன்களைப் போன்று இல்லாமல் திட்டமிட்டுக் கற்பிக்கப்பட வேண்டியவை ஆகும். கேட்டல் திறன் போன்று வாசித்தலும் ஒரு கொள்திறன் (Receptive Skill) எனப்படுகிறது. பேசுதல், எழுதுதல் ஆகிய ஆக்கத் திறன்களுக்கு (Productive Skill) வாசிப்பு எனும் கொள்திறன் அத்தியாவசியமாகிறது. நாளடைவில் கேட்டல் திறனுக்குப் பதிலாக வாசிப்புத் திறனே ஒருவரின் அறிவாற்றலுக்கு மூலமாக அமைந்து விடுகிறது. இத்திறனை அடைந்த மாணவர்களிடையே வாசிக்கும் பழக்கம் இயல்பாகவே அமைந்து விடும் என்றால் அது மிகையாகாது.

வாசிப்புத் திறன் அன்றாட வாழ்க்கையில் மிகவும் தேவைப்படும் ஓர் இன்றியமையாதத் திறனாகும். வாசிப்பு என்பது வரிவடிவத்திலுள்ள சொற்களை ஒலி வடிவமாக உச்சரித்துப், பின் அஃது உணர்த்தும் கருத்தினைப் புரிந்து உணர்வதே ஆகும். சொற்களைக் காணுதல், உச்சரித்துப் படித்தவற்றின் பொருளை உணர்தல் என வாசித்தலில் மூன்று கூறுகள் உள்ளன (எரிஸ், சிபேய், 1980). தொடர்ந்து, வாசிப்பில் உரக்க வாசித்தல், மௌன வாசித்தல் என்று இரண்டு முறைகள் உண்டு என்று குறிப்பிடப்படுகின்றது. வாசிப்புப் பகுதியிலிருந்து எழுத்துக்களைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்துச் சொல்லி பொருள் உணர்தலையே உரக்க வாசித்தல் (Oral Reading) எனப்படுகிறது. இச்செயலில் முக்கூறுகள் அடங்கியுள்ளன. அவை சொற்களைக் காணுதல், சீர்பட உச்சரித்தல், உள்ளத்தாற் கருத்துணர்தல் என்பவற்றை வாய்விட்டு வாசிக்கும் பொழுது தெளிவாகக் காணலாம் (கிப்சன், லேயா, 1957).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மௌன வாசிப்பு (Silent Reading) என்பது வாசிப்புப் பகுதியினை மனத்திற்குள்ளே, ஒலித்தல் உச்சரிப்பு இன்றி முணு முணுப்புக் கூட இல்லாமல் வாசித்தல் ஆகும். வாசித்தலின் கருத்துணரும் ஆற்றல், சொற்களஞ்சியப் பெருக்கம் ஆகியவை மௌன வாசிப்பின் முக்கிய கூறுகளாகும். மௌன வாசிப்பில் அகன்ற வாசிப்பு, ஆழ்ந்த வாசிப்பு, மேலோட்ட வாசிப்பு, ஆய்ந்த வாசிப்பு என்று நான்கு வகைகள் உண்டு. மௌனமாக வாய்க்குள்ளே விரைந்து வாசித்துப் பொருளுணர்ந்து கொண்டு போவதே அகன்ற வாசிப்பு ஆகும். அகன்ற வாசிப்பின் முக்கியக் கூறுகளாகக் கருத்துணர்தலையும் விரைவையும் குறிப்பிடலாம். ஆழ்ந்த வாசிப்பு என்பது வாசிப்புப் பகுதியை ஆழமாகக் கருத்தூன்றி, அதில் அடங்கியுள்ள கருத்துகள், சொற்றொடர் அமைப்புகள், சிறப்புகள், சொல்லாட்சி, மொழியமைப்பு, மொழி மரபு போன்றவற்றை நுணுக்கமாக வாசித்துக் கற்பதாகும். ஒரு வாசிப்புப் பகுதியின் தலைப்பு, சுருக்கம், உள்ளட்டைகள், படங்கள், குறி வரைவுகள், முன்னுரை, போன்ற குறிப்புகளை விரிவாக வாசித்து அப்பகுதியின் கருத்தை அறிய வாசிக்க முற்படுவதே மேலோட்ட வாசிப்பு அணுகுமுறை ஆகும். முக்கியத் தகவல்களைப் பெற கருத்தூண்றி, ஆராய்ந்து, சிந்தித்துப் பொருமையுடன் வாசிக்கும் அணுகுமுறை ஆய்ந்த வாசிப்பாகும். மாணவனின் மொழித்திறனை வளர்த்து தானாவே வாசிக்கும் பழக்கத்தினை ஆய்ந்த வாசிப்பு வளப்படுத்தும் என்பதுக் குறிப்பிடத்தக்கது (டுர்கின், 1980).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், வாசிப்புச் சிறப்பு நோக்கம், பொது நோக்கம் என இரண்டு நோக்கங்களைக் கொண்டுள்ளது. சிறப்பு நோக்கம் என்பது வாசிக்கும் பகுதியை விரைவாகக் கிரகித்துப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மாணவர்களுக்கு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உடனடியாகக் கிடைக்கக்கூடியதாகும். சிறப்பு நோக்கத்தில் முதன்மையாகக் குறிப்பிடப்படுவது வாசிப்பின்போது வேகம், தொனி, உச்சரிப்பு ஆகும். பொது நோக்கம் என்பது மாணவர்கள் சிறப்பு நோக்கத்தைக் கடைப்பிடிப்பார்களானால் அவர்கள் பள்ளி வாழ்க்கையை முடித்தப் பிறகு, தங்கள் பொது அறிவை மேலும் வளர்த்துக் கொள்ளவும் பல்வேறு நூல்களைக் கற்று அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் உதவும் கருவியாகும். பொது நோக்கத்தில் முதன்மையாகக் காணப்படுவது அறிவு வளர்ச்சி, கருத்துணர்தல், மொழி வளத்தைப் பெருக்குதல் போன்றவை ஆகும் (பிராங்க் சிமித், 1975).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.3 ஆய்வுச் சிக்கல்

இன்றையக் காலக்கட்டத்தில் இடைநிலப்பள்ளி மாணவர்களிடையே அதிகளவில் காணப்படுவது வாசிப்புத் திறனால் ஏற்பட்டும் சிக்கல்கள் ஆகும். வாசிப்புப் பகுதியினை வாசித்தால் போதுமானது என்பது தற்கால மாணவர்கள் சமுதாயத்தில் பரவிவரும் தவறான கூற்றாகும். வாசிக்கும் பகுதியினை நன்கு புரிந்துகொள்வதோடு கருத்துகளையும் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். ஆனால், வாசிப்பதற்கு முதல் தடையாகவே இருப்பது மாணவர்களால் சொற்களைச் சரியாக அடையாளங்கண்டு உச்சரிப்புப் பிழையின்றி சரளமாக வாசிக்க முடியாதது என்பதாகும் (ஆர் வீரரட்சகி, 2021). வாசிக்கும்போதே திக்கி தினறும் மாணவர்கள், வாசிப்புப் பகுதியிலுள்ள கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, பெரும்பாலான மாணவர்கள் லகர,ளகர,ழகர,ணகர,னகர,நகர,றகர,ரகர எழுத்து வரிசை கொண்ட சொற்களைச் சரியாக அடையாளம் காணுவதில் சிக்கல் கொள்கிறார்கள். அதாவது, வேறு பொருள் தரக்கூடிய எழுத்துக்கு மற்றொரு எழுத்தினைக் கொண்டு வாசிக்கிறார்கள். உதாரணத்திற்கு, பலம்-பழம் எனும் சொற்கள் எழுத்தளவிலும் பொருள் அளவிலும் வேறுபாட்டினைக் கொண்டுள்ளது. ஒரு எழுத்துத் தவறாகப் போனலும் சொல்லின் பொருள் மாறிப்போகக்கூடும். சொற்களின் பொருள் மாறிபோவதால் வாசிப்புப் பனுவலைச் சரியாகப் புரிந்துக்கொள்வதில் மாணவர்களுக்குச் சிக்கல் ஏற்படுகிறது. வாசிப்புத் திறனில் இச்சிக்கல் ஏற்படுவதால் மாணவர்களுக்கு மற்ற அடிப்படை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


திறன்களிலும் சவாலை எதிர்நோக்கக்கூடியச் சூழ்நிலை நேரிடக்கூடும் (ஆர்.வீரரட்சகி, 2021).

வாசிக்கும்போதுக் குறிப்பாக மாணவர்களின் உச்சரிப்பில் அதிகமாகப் பிழை ஏற்படுகிறது. சாதாரன வாசிப்புப் பகுதியை வாசிக்கவே சிரமப்படும்போது, மற்ற வாசிப்புப் படிவங்களை அதற்கேற்ற வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பதில் மாணவர்கள் தடுமாற்றம் அடைகிறார்கள். மாணவர்களின் படிவத்திற்கு ஏற்றவாறும் அவர்களின் கல்வி நிலைக்கு ஏற்றவாறும் வாசிப்புப் பனுவல்களைக் கொடுப்பது சிறப்பாகும் (ஹர்மர்.ஜே, 2001). இதனால், மாணவர்கள் சரளமாக வாசிக்க முயற்சி செய்வதோடு, வாசிப்புப் பகுதியினை எவ்வாறு வாசிக்க வேண்டும் என்பதையும் வாசிப்புப் பகுதியிலுள்ள கருத்துகளைப் புரிந்து கொள்ளவும் உதவியாக இருக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, வாசிப்பில் மாணவர்களுக்குப் பெரும் சிக்கலாக அமைவது வாசித்தலின்போது வாசிப்புப் பனுவலை முழுமையாகப் புரிந்துக்கொள்ள முடியவில்லை என்பதாகும். சில மாணவர்கள் வாசிப்புப் பனுவலைக் கடகடவென வாசித்துவிடுகிறார்கள். ஆனால் வாசித்த பின்பு, என்ன வாசித்தார்கள் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. வாசிப்புப் பனுவல் எதை பற்றியது மற்றும் வாசிப்புப் பனுவல் எதனை மையமாகக் கொண்டுள்ளது போன்றவற்றை உள்வாங்கிக்கொள்வதில் மாணவர்களுக்குச் சிரமம் ஏற்படுகிறது.

மேலும், மாணவர்களிடையே வாசிப்பின்போது, இத்தகைய உச்சரிப்புச் சிக்கல் ஏற்படுவதால் அவர்கள் வாசித்ததைத் திரும்ப திரும்ப வாசிக்கும் நிலை ஏற்படக்கூடும். வாசித்தால் போதும் எனும் எண்ணம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஏற்படும்போது, மாணவர்கள் பயவுணர்விலும் பொறுமையின்றியும் சரியாக வாசிக்காமல் எழுத்துகளை விழுங்குவதும் பேச்சு மொழியைப் பயன்படுத்தவும் செய்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தவறான முறையில் வாசிப்பதால் மாணவர்களுக்கு அருஞ்சொற்கள் புரியாமை, பொருளுணர்ந்து வாசிக்காத நிலை, உணர்வின்றி வாசித்தல் போன்ற சிக்கல்கள் ஏற்படுகிறது (சிமித்.வ், 2004). இதனால், தேர்வின்போதும் மாணவர்க கருத்துணர் கேள்விக்குப் பதிலளிக்க வாசிப்புப் பகுதியினை வாசிக்க முடியாமல் சிரமம் வரக்கூடும்.

ஆகவே, ஆய்வாளர் KWLH அணுகுமுறையின் வழி இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புத் திறனில் ஏற்படும் சிக்கல்களைக் களையவுள்ளார். மாணவர்களுக்கு வாசிப்புத் திறனை எளிமையான முறையில் மேம்படுத்தும் வகையிலும் KWLH அணுகுமுறை அமைந்துள்ளது எனலாம். வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கான ஒரு பயனுள்ள KWLH அணுகுமுறையாக அமைக்கப்பட்டுள்ளதால் கற்றல் கற்பித்தலில் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களை விரைவில் அடையாளங்கண்டு சிக்கல்களை உடனடியாகக் களைய முடியும் எனக் குறிப்பிடப்படுகிறது (டாக்டர். மஹா ஹாமட் அல்சாய்டே, 2020). ஏனெனில், KWLH அணுகுமுறை மாணவர்களுக்கு வாசிப்புப் பனுவலின் புரிதலை அதிகரிக்க உதவும். மேலும், மாணவர்களின் முன் அறிவைச் செயல்படுத்துவதையும் வாசிப்புப் பகுதியினைப் பற்றி என்ன தெரிந்துக்கொள்ள விரும்புகிறார்கள் என்பதையும் வாசித்து முடித்த பின், அதைப் பற்றி மீண்டும் சிந்திக்க உதவுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## 1.4 ஆய்வு நோக்கம்

ஓர் ஆய்விற்கு முதன்மையான கூறாக அமைந்திருப்பது நோக்கம் ஆகும். இந்த ஆய்வின் நோக்கம் பின்வருமாறு:

I. இரண்டாம் படிவ மாணவர்களுக்கு ஏற்படும் வாசிப்புச் சிக்கலை அடையாளங்காணுதல்.

II. இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புச் சிக்கலின் காரணங்களைக் கண்டறிதல்.

III. இரண்டாம் படிவ மாணவர்களுக்கு வாசிப்பில் ஏற்படும் சிக்கலை KWLH அணுகுமுறை வழி களைதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



### 1.5 ஆய்வு வினா

ஆய்வின் வினா என்பது ஆய்வின் நோக்கத்தைச் சார்ந்தே அமையும். இந்த ஆய்வின் வினா பின்வருமாறு:

I. இரண்டாம் படிவ மாணவர்களுக்கு எவ்வாறான வாசிப்புச் சிக்கல்கள் ஏற்படுகின்றன?

II. இரண்டாம் படிவ மாணவர்களுக்கு வாசிப்பில் சிக்கல் ஏற்படுவதற்கான காரணம் என்ன?

III. இரண்டாம் படிவ மாணவர்களிடையே KWLH அணுகுமுறையின் வழி எவ்வாறு வாசிப்புச் சிக்கலைக் களைதல்?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.6 ஆய்வு நன்மைகள்

இந்த ஆய்வில் ஆய்வாளர் கையாண்ட அனைத்து நடவடிக்கைகளும் மாணவர்களுக்கு வாசிக்குபோது ஏற்படும் சிக்கல்களைக் களையப் பெரும் அளவில் உதவியது. மேலும், அவர்களது வாசிப்புத் திறனை மேம்படுத்தவும் முடிந்தன. அதற்கு KWLH அணுகுமுறையின் பங்கும் அதிக அளவில் இருந்தது. KWLH அணுகுமுறையின் உதவியோடு நடத்தப்பட்ட இந்த ஆய்வுப் பெரும்பாலும் இரண்டாம் படிவ மாணவர்கள் வாசிப்பின்போது புரிதலை அதிகரிக்க பெரிதும் துணை புரிந்தது. இந்த அணுகுமுறை கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு சிறந்த முறையாகவே அமைகிறது.

இந்த ஆய்வின் மூலம் மாணவர்களிடையே ஏற்படும் வாசிப்புச் சிக்கலைக் களைய முடிந்தன. KWLH அணுகுமுறையைப் பயன்படுத்தியதால் மாணவர்களின் வாசிப்புச் சிக்கலையும், வாசிப்புச் சிக்கல்கள் ஏற்படும் காரணங்களையும் அடையாளங்காண முடிந்தன. கற்றல் கற்பித்தலில் இந்த அணுகுமுறையின்படி நடத்தியச் சில நடவடிக்கைகள் மாணவர்களுக்கு வாசிப்பில் ஆர்வத்தைத் தூண்டியது எனலாம். மேலும், மாணவர்கள் ஆர்வம் செலுத்துவதால் ஆசிரியர்களும் சுலபமாகக் கற்றல் கற்பிதலை நடந்த முடிந்தன.

இந்த ஆய்வு மாணவர்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கு அதிகளவில் துணைப்புரிந்தது எனலாம். வாசிப்பினால் மாணவர்களின் சிந்தனை திறனை வளர்க்க முடிந்தது. அதாவது, வாசிக்கும் வாசிப்புப் பகுதியிலுள்ள கருத்துகளை அறிந்து, தான் முன்னறிந்த கருத்துகளோடுத் தொடர்புப்படுத்திப் புதியக் கருத்துகளை உருவாக்கிக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கொள்ள முடிகிறது. தொடர்ந்து, மாணவர்களால் வாசித்தலின்போது பொருளைப் புரிந்து கொள்ள முடிந்தது. பொருளுணர்ந்து வாசிப்பதற்கு மௌன வாசிப்பே சிறந்தது எனக் கண்டுக்கொள்ள முடிந்தது. மாணவர்களால் மொழித்திறனை அடைய முடிவதோடுக் கருத்துணர்ந்து வாசிப்பதால் மொழியில் புலமை பெறவும் மொழித்திறன் அடையவும் வாசிப்பு முக்கியமாகவும் வித்தாகவும் அமைகிறது என்பதனை இந்த ஆய்வின் மூலம் தெரிந்துக்கொள்ள முடிந்தது.

மேலும், இந்த அணுகுமுறையைக் கையாளுவதால் மாணவர்களின் சொல் வளம், மொழி வளம் போன்றவை மேம்படுகிறது. வாசிப்புத் திறனை மேம்படுத்திக் கொள்வதால் ஒரு வாசிப்புப் பகுதியின் நேரடிப் பொருளையும் உட்பொருளையும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது. வாசித்த விவரங்களை முன்னறிவோடு தொடர்புப்படுத்திப் பொருள் காணவும் வழி வகுக்கிறது. இதனால், அவர்களுடைய அறிவாற்றலும் பெருகுகிறது என்பது குறிப்பிடப்படுகிறது. அதுமட்டுமல்லாது, தனது கல்வி நிலை அறிந்து மாணவர்களும் தங்களுக்குப் பொருத்தமான வாசிப்பு முறைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடிகிறது. இதனால், அவர்களது வாசிப்புத் திறனை மேம்படுத்திக் கொள்ள பெரிதும் உதவுகிறது.

இது போன்ற பல அணுகுமுறையைக் கையாளுவதால் ஆசிரியர்களுக்கு கற்றல் கற்பித்தலில் ஏற்படும் குறைகளை எளிதில் கண்டறிந்து களைய முடியும். மேலும், எப்போதும் போன்று சாதரணமாக வாசிப்புத் திறனை போதிப்பதால் மாணவர்களுக்கும் பெரிய அளவில் கற்றல் கற்பித்தலில் ஆர்வம் இருக்காது. ஆதலால், இத்தகைய அணுகுமுறைகளைப் பயன்படுத்துவது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் முயற்சியில் நிச்சயமாக ஆசிரியர்கள் வெற்றிக் காண இயலும். இது போன்ற சரியான வாசிப்பு நுட்பங்களும் அணுகுமுறைகளும் மாணவர்களிடையே ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுத்துவதால் மாணவர்கள் மென்மேலும் வாசிப்புத் திறனில் ஆளுமை பெறலாம் (சிட்டி ஹஜார் அப்துல் அஜிஸ், 2009).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## 1.7 ஆய்வு எல்லை

இந்த ஆய்வினைப் பினாங்கு மாநிலத்தில் உள்ள பட்டர்வெர்த் நகரில் அமைந்துள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பள்ளியில் சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ்மொழியை தேர்வுப் பாடமாகப் பயில்கிறார்கள். படிவம் ஒன்று முதல் படிவம் ஐந்து வரையிலான மாணவர்கள் இக்கணக்கில் அடங்குவர். ஆனால், இரண்டாம் படிவ மாணவர்கள் மட்டுமே இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர். ஆய்வின்போது, ஆய்வாளர் பள்ளியின் ஆசிரியர் ஒருவரையும் நேர்காணல் செய்ய உட்படுத்தினார். அந்த ஆசிரியர் இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களுக்குத் தமிழ்மொழி போதிக்கும் ஆசிரியர் ஆவார். ஆய்வாளரின் ஆய்விற்குத் தேவையான தரவுகள் மாணவர்களிடமிருந்தும் ஆசிரியரிடமிருந்தும் கிடைக்கப்பெற்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## 1.8 ஆய்வுச் சான்றாதாரம்

### 1.8.1 முதன்மைச் சான்றாதாரம்

ஆந்த ஆய்வுக்கானத் தரவுகளைச் சேகரிப்பதற்கு ஆய்வாளர் பட்டர்வெர்த் பினாங்கு இடைநிலைப்பள்ளி தமிழ் மொழி ஆசிரியரை நேர்காணல் செய்தார். மேலும், படிவம் இரண்டு மாணவர்களையும் முதன்மை சான்றாதாரமாகப் பயன்படுத்தினார். மாணவர்களிடம் கருத்தறி வினா நிரல் கொடுத்து, அவர்களின் பதிகளைத் தகவல்களாகப் பெற்றார். மேலும், மாணவர்களுக்கு முன்னறித் தேர்வும் பின்னறித் தேர்வும் நடத்தப்பட்டதன் வழி, அவர்களின் அடைவு நிலை கண்டறியப்பட்டன. ஆசிரியரிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்றத் தகவல்கள் ஆய்விற்குப் பெரும் அளவில் துணை புரிந்தன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.8.2 துணை சான்றாதாரம்

ஆய்வாளர் ஆய்வினை நிறைவுச் செய்வதற்குச் சில புத்தகங்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் துணை சான்றாதாரமாகப் பயன்படுத்தினார். துணை சான்றாதாரத்தின் வழி, கிடைக்கப்பெற்றத் தகவல்கள் இந்த ஆய்விற்கு உறுதுணையாக அமைந்தன. மேலும், ஆய்வாளர் இணையத்தின் மூலமாகவும் இந்த ஆய்வுக்கானத் தகவல்களைத் திரட்டினார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## 1.9 கலைச்சொற்கள் விளக்கம்

ஆய்வின் தலைப்பில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்களின் விளக்கம் பின்வருமாறு:

### 1.9.1 KWLH அணுகுமுறை

1986-ஆம் ஆண்டில், சிகாகோவில் உள்ள நேஷனல் லூயிஸ் பல்கலைக்கழகத்தில் படித்தல் மற்றும் மொழியின் எமரிட்டோ பேராசிரியரான டோனா எம்.ஒக்லே KWLH அணுகுமுறையைக் கண்டுபிடித்தார். இவர் மாணவர்களுக்குக் கல்வியரிவையும் வாசிப்புப் புரிதலையும் திறம்பட கற்பிக்க உதவும் உத்திகளை ஆராய்ச்சி செய்தலில் கிடைக்கப்பெற்ற அணுகுமுறைகளுள் ஒன்றுதான் KWLH அணுகுமுறை ஆகும். வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கு உச்சரிப்புப் பிழையின்றி சரளமாக வாசித்தல் மட்டும் போதாது என்றும் வாசித்தவற்றைச் சரியாக புரிந்து கொள்ளவும் வேண்டும் என்பதனை இவ்வணுகுமுறையின் மூலம் தெளிவுப்படுத்தியுள்ளார். மேலும், KWLH அணுகுமுறையின் விளக்கப்படம் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தப் பெரிதும் உதவுகிறது எனலாம். வாசிப்பில் மாணவர்களை அதிகளவில் ஈடுபடுத்துவதற்கான புதிய வழியாக, KWLH அணுகுமுறையின் விளக்கப்படம் திகழ்கிறது.

KWLH அணுகுமுறை என்பது சுய அறிவை மீட்டறிதல், அறிந்து கொள்ள விழையும் பொருள் அறிவை அடையாளங்காணுதல், வாசிப்புப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



பகுதியிலிருந்து தெரிந்துக்கொண்டவற்றை மீட்டறிதல் ஆகிய மூன்று சிந்தனை முறைகளைக் கொண்டு உள்ளதாகும். ஒரு வாசிப்புப் பகுதியை வாசிப்பதற்கு முன்னும், வாசிக்கும் போதும், வாசித்தப் பிறகும் கையாள வேண்டிய வழிமுறைகளைக் குறிக்கின்றது. இந்த KWLH அணுகுமுறையில் ஒவ்வொரு எழுத்தும் வெவ்வேறு பொருளைக் குறிப்பதாகும். K (KNOW) என்பது வாசிக்கத் தொடங்கும் முன் வாசிக்கவிருக்கும் வாசிப்புப் பகுதியைப் பற்றி ஒரு மாணவருக்கு 'என்ன தெரியும்' என்பதை ஆராய்வதாகும். அடுத்து, W (WANT-TO-KNOW) என்பது அந்த வாசிப்புப் பகுதியிலிருந்து ஒரு மாணவன் என்ன அறிந்து கொள்ள விழைகிறான் என்பதாகும். KWLH-இல் L (LEARN) என்பது வாசிப்புப் பகுதியில் படித்தவற்றைத் தெரிந்து கொள்ளுதல் ஆகும். அதாவது வாசிப்புப் பகுதியில் புரியாதவற்றை ஆராய்ந்து தெரிந்து கொள்வதோடு வாசிப்புப் பகுதியிலுள்ள புதியவற்றை தெரிந்து கொள்வதாகும். தொடர்ந்து, L (LEARN) படிநிலையைக் கடக்க உதவுவதே H (HOW) ஆகும். மேல் விவரங்களைத் தெரிந்து கொள்வது எப்படி என்பதை ஆராய்வதே H (HOW) ஆகும்.

இந்த KWLH அணுகுமுறையைப் பயன்படுத்துவதற்கு மாணவர்கள் முதலில் அதற்கான ஓர் அட்டவனையைத் தயாரிக்க வேண்டும். அட்டவனை பின்வறுமாறு :

| K | W | L | H |
|---|---|---|---|
| | | | |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


KWLH அணுகுமுறையின் வழி மாணவர்களின் வாசிப்புத் திறனை நிச்சயமாக மேம்படுத்தக்கூடும். இந்த அணுகுமுறையைப் பயன்படுத்துவதால் மாணவர்கள் என்ன வாசிக்கிறோம் என்பதை நன்கு அறிந்து வாசிப்பதோடு மேலும் அவர்களுக்கு வாசிப்பிலும் ஈடுபாடு பெருகும். மாணவர்கள் வாசிப்புப் பகுதியின் நோக்கத்தை அறிந்து வாசிப்பதற்கு ஒரு சிறந்த வழியாகும் இந்த அணுகுமுறை. அதுமட்டுமல்லாது, இவ்வணுகுமுறை மாணவர்களின் புரிதலையும் விமர்சன சிந்தனையையும் சிக்கலைத் தீர்க்கும் திறனையும் மேம்படுத்த உதவும் எனலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.10 தொகுப்புரை

இந்த ஆய்வில் இடம்பெற்றுள்ள இம்முதலாம் இயலில் மேலோட்டமானத் தகவல்கள் கூறப்பட்டுள்ளன. ஆய்வின் முன்னுரை, ஆய்வின் பின்னணி, ஆய்வின் சிக்கல், ஆய்வின் சோக்கம், ஆய்வின் வினா, ஆய்வி நன்மைகள் பற்றி ஆய்வாளர் விளக்கியுள்ளார். மேலும், ஆய்வின் எல்லையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்ட இடத்தையும் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து, ஆய்வின் சான்றாதாரத்தில் எவ்வாறுத் தகவல் கிடைக்கப்பெற்றது என்பதையும் கூறியுள்ளார். கலைச்சொற்களின் விளக்கமமும் ஆய்வாளரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் இந்த ஆய்விற்கு ஓர் அறிமுகமாகவே திகழ்கிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi